★ ஸ்ரீ என். ஜி. ஐய்யங்கார் மறைவு: நாடெங்கும் துக்கம் ★

Regd. No. M. 3145. ★ ★ ★ THE LARGEST CIRCULATED TAMIL DAILY
(Simultaneously published in Madras and Madurai)

6 பக்கங்கள்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர்- 19 இதழ் 147
விமானப் பதிப்பு 0-1-6

தினமணி

ஆசிரியர்: ஏ.என்.சிவராமன்
காலை பதிப்பு DINAMANI

சென்னை ★ நந்தன ஞு தைமீ 29உ ★ புதன்கிழமை ★ 11—2—53) ★ ஹிஜிரா 1372 ஜமாதிலவ்வல்மீ 26உ

கோஜே யுத்த கைதிகள் முகாமில் கலகம்

ஐ. நா. படை நடவடிக்கையால் ஒருவர் மரணம்: பலருக்கு காயம்

டோக்கியோ, பிப். 10—கோஜே தீவில் நேற்று கொரியா யுத்தக் கைதிகள் முகாமில் ஏற்பட்ட கலகத்தை ஐ. நா. படைகள் அடக்கின. ஐ. நா. படைகள் எடுத்த நடவடிக்கைகளின் பலனாக ஒரு கைதி கொல்லப்பட்டார். 38 பேர் காயமடைந்தனர். இவர்களில், 18 பேருக்கு கடுமையான காயம்.

கலகத்தை அடக்க ஐ. நா. படையினர் எரி குண்டுகளையும் துப்பாக்கிகளையும் உபயோகிக்க வேண்டியிருந்தது. கம்யூனிஸ்ட் கைதிகள் ஐ. நா. காவல் காரர்கள் மீது ஏராளமாக கற்பனை வீசினர்.

"பழம்பெரும் ராஜதந்திரி" என தலைவர்கள் பாராட்டு

எனக்கு சொந்தப் பெரு நஷ்டம் என்றார் நேருஜி

நாட்டின் ஆட்சிக்கு ஒப்பற்ற செல்வம் —ராஜாஜி

முப்படைகளின் கடைசி மரியாதையுடன் தகனம்

சென்னை, பிப். 10—இந்திய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ என். ஜி. அய்யங்காரின் மரணச் செய்தி, நாடு முழுதையும் துக்கக் கடலில் ஆழ்த்தியது (மரணமடைந்த செய்தி, தகனக் கிரியை, தலைவர்களின் துக்கச் செய்தி ஆகிய விவரங்களை 3-ம் பக்கத்தில் காணலாம்.

பழம் பெரும் ஒரு ராஜதந்திரியை இந்தியா இழந்துவிட்டது குறித்து பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சி ஆழ்ந்த துக்கம் தெரிவித்தது.

"கஷ்டமான சமயங்களில் அன்னாரின் ஆலோசனைகளை நாடிவந்தோம். அன்னாரின் மறைவு தேசத்துக்கும் சர்க்காருக்கும் பெரும் நஷ்டம் எனக்கு சொந்த முறையிலும் பெரிய நஷ்டமாகும்" என்று நேருஜி துக்கம் தெரிவித்தார்.

"அன்னார் நாட்டின் ஆட்சிக்கு ஒப்பற்ற செல்வமாயிருந்தார்" என்று ராஜாஜி கூறினார்.

துக்கம் தெரிவித்து இந்திய சர்க்கார் கெஜட்டில் செய்தி பிரசுரித்தது.

இந்தியத் தலை நகரில்

டில்லியில் எல்லா சர்க்கார் காரியாலயங்களும் அடைக்கப்பட்டன. கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

எல்லா ராஜ்ய சர்க்கார் காரியாலயங்களும் இந்திய சர்க்காரின் முப்படைகளும் துக்கம் அனுஷ்டிக்கின்றன.

சென்னை உட்பட எல்லா ராஜ்ய கார்யாலயங்களும் இதர பொது ஸ்தாபனங்களும் மூடப்பட்டன.

சென்னையில்

மரணமடைந்த செய்தியைக் கேட்டு சென்னையிலுள்ள தலைவர்களும், பொது ஜனப் பிரமுகர்களும், மந்திரிகளும் அன்னாரின் ஜாகைக்கு சென்று கடைசிமரியாதை செலுத்தினர்

ராணுவ மரியாதையுடன் கூட ஹிந்து வைதிக முறைபடி ஸ்ரீ என். ஜி. அய்யங்காரின் தகனக்கிரியைகள் நடந்தன.

பீரங்கி வண்டிமீது ராணுவ மரியாதைகளுடன் பிரேத ஊர்வலம் நடந்தது. சோகக் கடலில் ஆழ்ந்த திரளான கூட்டத்தினர் ஊர்வலத்தில் கலந்துக் கொண்டனர்.

சர்க்கார் காரியாலயங்கள் மூடப்பட்டன. (விரிவான செய்திகள் 3-ம் பார்க்கம்)

பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சி துக்கம்

புதுடில்லி, பிப். 10—ஸ்ரீ என். ஜி. அய்யங்காரின் மரணத்தில் துக்கம் தெரிவித்து இன்று பார்லிமென்ட் காங்கிரஸ்கட்சி ஒரு வருத்தத் தீர்மானம் நிறைவேற்றியது. ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார் பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சியின் உதவி தலைவர்.

தீர்மானத்தை நேருஜி படித்தார். தீர்மானம் கூறுவதாவது:

கட்சியின் உதவி தலைவரும் ராஜாங்க சபையில் சர்க்கார் கட்சி தலைவருமாகிய ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்காரின் துக்ககரமான மரணச் செய்தியை கேட்டு பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சி வருந்துகிறது. பழம் பெரும் ஒரு ராஜதந்திரியை தேசம் இழந்துவிட்டது. அன்னாரின் விவேகமான ஆலோசனைகளும் பழுத்த அனுபவமும் நாட்டுக்கு மிகவும் உபயோகமாக இருந்தன.

நேருஜி தமது வருத்தத்தைத் தெரிவித்துப் பேசுகையில் "நம்முடன் சேர்ந்து வெகுகாலமாக உழைத்து வந்த ஒரு நண்பரை இழந்துவிட்டோம், இதனால் ஏற்பட்டுள்ள ஆபத்தை சமாளிப்பதற்கு நாம் ஒற்றுமையாக இருப்பதே வழி" என்று கூறினார்.

நாளை (புதன்) கூடும் பட்ஜட் கூட்ட பரிசீலனை விஷயங்கள் இன்றைய கட்சிக் கூட்டத்தில் விவாதிப்பதாயிருந்தது. அந்த அலுவலை கவனியாமல் ஸ்ரீ என். ஜி. அய்யங்காருக்கு மரியாதை செலுத்தும் அறிகுறியாக கூட்டம் ஒத்திப்போடப்பட்டது.

மெம்பர்கள் இன்று ஒரு நிமிஷம் மௌனம் அனுஷ்டித்தனர்.

முப்படைகளும் துக்கம் அனுஷ்டிக்கின்றன

புதுடில்லி, பிப். 10—சென்னையில் இன்று காலை பாது காப்பு மந்திரி ஸ்ரீ என். கோபாலஸ்வாமி அய்யங்கார் மரண மடைந்தது குறித்துத் துக்கம்தெரிவித்து மரியாதை காட்டுவதற்காக இந்திய பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தின் அதிகாரத்தில் உள்ள சகல பிரிவுகளும் ஸ்தாபனங்களும் இந்திய, ராணுவ, கடற் படை, விமானப் படை தலைமை ஸ்தாபனங்களும் இன்று மூடப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் மாஜி காமன்வெல்த் மந்திரி

பிரிட்டிஷ் மாஜி காமன் வெல்த் உறவு மந்திரி (தொழிற் கட்சி) ஸ்ரீ கார்டன் வாக்கர் அளித்த பேட்டியில் "அன்னாரின் தெளிவான புத்தியையும் மனோ வலிமையையும் கண்டு நான் வியப் படைந்திருக்கிறேன்; அன்னாரின் மறைவு இந்தியாவுக்கு மட்டுமின்றிகாமன்வெல்த் முழுதுக்கும் பெரு நஷ்டம்" என்று கூறினார்.

பிரிட்டிஷ் அரசியல் வட்டார துக்கம்

லண்டன், பிப். 10-2-53—ஸ்ரீ என். ஜி. அய்யங்காரின் மரணச் செய்தி பிரிட்டிஷ் அரசியல் வட்டாரத்தை இன்றுஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியது.

ஸ்ரீ. வி. கே. கிருஷ்ணமேனன்

ஸ்ரீ. வி. கே. கிருஷ்ண மேனன் (பிரிட்டனில் இந்தியாவின் மாஜி ஹை கமிஷனர்) அளித்த பேட்டியில் இந்தியா தனது விசுவாசம்

(2ம் பக்கம் பார்க்க)

ராஷ்டிரபதியின் துக்கச் செய்தி

புதுடில்லி, பிப். 10—ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அனுப்பியுள்ள துக்கச் செய்தியில் கூறுவதாவது:

கோபாலசுவாமி ஐயங்காரின் மரணச் செய்தி கேட்டு மிக்கத் துக்கமடைந்தேன். தம்தேக சுகத்தையும்பொருட்படுத்தாது நாட்டுக்குத்தம்மாலான அனைத்தையும் செய்தார் அவர் மரணம் இந்தியாவுக்கும், சொந்த முறையில் எனக்கும் பெரும் நஷ்டமாகும். என் அனுதாபம் உரித்தாகுக.

மேலே கண்ட செய்தி சென்னை கவர்னர் மூலம் ஸ்ரீமதி கோபாலசுவாமி ஐயங்காருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உதவி ராஷ்டிரபதி

புதுடில்லி, பிப். 10—இந்திய உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: நமது முன்னணித் தலைவர்களில் ஒருவரை நாம் இழந்துவிட்டோம் அவரை எனக்கு 40 வருஷங்களாகத் தெரியும். அவர் கை வைத்த வேலை யெல்லாம் அழகாக முடிந்து வந்தன.

சொந்த நஷ்டம் என்கிறார் நேருஜி

புதுடில்லி, பிப். 10—பிரதம மந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அனுப்பியுள்ள செய்தியில் கூறுவதாவது:—

"ஸ்ரீ. கோபாலஸ்வாமி ஐயங்காரின் மரணச் செய்தியை பற்றி இன்று காலையில் கேட்டு நான் ஆழ்ந்த துக்கமடைந்தேன். கடந்த ஆறு வருஷமாக அவர் என் நெருங்கிய, ஒப்பற்ற சகாவாக விளங்கினார். கஷ்டமான சமயங்களில் அவரது முதிர்ந்த யோசனையை நாங்கள் நாடி வந்தோம். அவரது மறைவு தேசத்திற்கும் சர்க்காரில் உள்ள அவரது இதர சகாக்களுக்கும் சொந்த முறையில் எனக்கும் பெரும் நஷ்டமாகும். என் ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

மேலே கண்டுள்ள செய்தியை நேருஜி சென்னை கவர்னர் மூலம் ஸ்ரீமதி கோபாலஸ்வாமி ஐயங்காருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ராஜாஜி வருத்தம்

ஈடு செய்ய இயலாத பெரு நஷ்டம் என்றார்

துக்கச் செய்தியைக் கேட்டு சென்னை முதல் மந்திரி ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரி பெரிதும் வருந்தினார்.

"நாட்டின் ஆட்சிக்கு ஒப்பற்ற செல்வமாக இருந்த ஒருவரை நாம் இழந்துவிட்டோம். இந்த நஷ்டம் ஈடு செய்யப்பட முடியாதது" என்று ராஜாஜி கூறினார்.

படை யெடுப்பை எதிர்க்க சீன கம்யூனிஸ்டுகள் ஏற்பாடு

தென் கடற்கரை யோரமாக எஃகு அரண் எழுப்புகின்றனர்

இன்னும் 3 அல்லது 6 மாதத்தில் சியாங்கேஷேக் படையெடுப்பை நடத்தலாம்

ஹாங்காங், பிப். 10—சீன கம்யூனிஸ்ட் சர்க்கார் தென் சீனக் கடற்கரை யோரப் பாதுகாப்புகளைப் பலப்படுத்தி வருகின்றனர். அதாவது, அங்கு எஃகு அரண் அமைக்கப்பட்டு வருவதாக பீகிங் ரேடியோ இன்று அறிவித்தது. சீனாவையோ அல்லது சீன கடற் கரையை அடுத்த தீவுகளையோ எதிரிகள் தாக்க முயன்றால் அவர்கள் கடலிலேயே அழிக்கப்படுவராம்.

பார்மோஸா நடுநிலைமையை ஜனாதிபதி ஐஸன்ஹவர் ரத்துச் செய்த பின்னர் சியாங் துருப்புகள் தாக்கக்கூடும் என்பது பற்றி இப்போதுதான் முதல் தடவையாக சீன கம்யூனிஸ்டுகள் பிரஸ்தாபித்திருக்கின்றனர்.

இன்னும் 6 மாதத்தில் படையெடுப்பு?

லாஸ் ஏஞ்செலஸ் செய்தி ஒன்று கூறுவதாவது: இன்னும் மூன்று மாதம் முதல் ஆறு மாதத்துக்குள்ளாக கம்யூனிஸ்ட் சீனா மீது பூரணமான படையெடுப்பு நடைபெறும் என்று பார்மோஸாவில் உள்ள ஒரு தேசிய சீன அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்தார்.

சியாங்-கே-ஷேக்கின் நிர்வாகத் திட்டக்கமிட்டி மெம்பர் ஸ்ரீ சாவோ லென் நிருபர்களிடம் கூறினார்: "கொரியா சண்டைகளில் நாங்கள் எங்களுடைய ஆள் பலத்தை விரயம் செய்ய விரும்பவில்லை. எங்களுக்குக் கப்பல்கள், விமானங்கள் போதிய அளவில் காலக் கிரமத்தில் கிடைக்கும் என்று நம்புகிறேன்."

சியாங் துருப்புகள் கம்யூனிஸ்ட் சீனா மீது படையெடுத்தால் ரஷ்யா நேரிடையாகத் தலையிடாது என்று தான் நம்புவதாக அவர் கூறினார். தலையிடுமா என்பது சந்தேகந்தான் என்று அவர் கூறினார். ஸ்ரீ சாவோ தற்பொழுது லாஸ் ஏஞ்சலசுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

நியூயார்க், பிப். 10—கொரியா போரை நிறுத்தாவிடில் சீனா மீது அணுக்குண்டுகள் வீசப்படும் என்றும், கடற்படை முற்றுகை பிரயோகிக்கப்படும் என்றும் எச்சரிக்குமாறு ஜனாதிபதி ஐஸன் ஹவரிடம் சில பெரிய அமெரிக்க அதிகாரிகள் யோசனை கூறியிருப்பதாக ஒரு பத்திரிகை கூறுகிறது. அணுக்குண்டுச் செய்தி அதிகாரபூர்வமாய் ஊர்ஜிதமாகவில்லை.

அணுகுண்டு வீச யோசனை

மேற்கூறிய அதிகாரிகளின் பெயர்கள் தெரிவிக்கப்படவில்லை. அத்தகைய நடவடிக்கையால் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் மூளும் என்று அந்த அதிகாரிகள் நம்ப வில்லை. அந்த அதிகாரிகள் தமது யோசனையைப் பூர்வாங்கமாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே சீனாவை யு. எஸ். கடற் படை முற்றுகையிடுவது பற்றியும் சியாங் துருப்புகள் படையெடுப்பு நடத்துவது பற்றியும் பல விதமான ஹேஷ்யங்கள் கிளம்பியிருக்கின்றன. அடுத்த வாரம் சியாங்கே ஷேக்கின் ஒரு ராணுவ தூது கோஷ்டி வாஷிங்டனுக்கு வரப் போவதால் இந்த வதந்திகள் பலமாயிருக்கின்றன. மேற்கூறிய தூது கோஷ்டியில் சியாங் கே ஷேக்கின் இரண்டாவது புதல்வரும் இருப்பது குறிப்பிடத் தகுந்தது. சியாங் கே ஷேக் தான் முக்கிய ராணுவத் தலைவர்கள் ஏற்கெனவே அமெரிக்காவில் இருப்பது குறிப்பிடத் தகுந்தது.

கடற் படை முற்றுகைக்கு ஆதரவு

கம்யூனிஸ்ட் சீனாவை யு. எஸ். கடற் படை முற்றுகை யிடவேண்டும் என்ற யோசனைக்குக் காங்கிரஸின் ஆதரவு பெருகிக் கொண்டிருக்கிறது. தூரக்கிழக்கில் கடற் படை முற்றுகை உள்ளிட்டு சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடிய எந்த நடவடிக்கையையும் தான் ஆதரிப்பதாகக் குடியரசுக் கட்சித் தலைவர் செனட்டர் டாப்ட் அபிப்பிராயம் தெரிவித்தார். ராணுவத் தலைவர்கள் சாத்தியம் என்று கருதினால் யு. எஸ். உதவியுடன் சியாங் துருப்புகள் சீனா மீது படையெடுப்பதையும் தான் ஆதரிப்பதாகசெனட்டர் டாப்ட் கூறினார். கடற்படை முற்றுகையிட சர்க்கார் ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாக தனக்குத் தெரியாதென்று டாப்ட் கூறினார்.

சீன கம்யூனிஸ்டுகள் மீது போர் நடத்துவதற்குப் பூரண ஆதரவு அளிப்பதாக சிங்கப்பூரில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட சீன சங்கங்கள் சியாங்கே ஷேக்கிற்கும் ஜனாதிபதி ஐஸன் ஹவருக்கும் தெரிவித்திருக்கின்றன. மலயோவில் உள்ள சீனர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் சீனா மீது படையெடுப்பு நடத்துவதை ஆதரிக்கிறார்கள்.

அமோயில் இறங்கவில்லையா?

டோக்கியோ செய்தி ஒன்று கூறுவதாவது: தென் சீன கடற்கரையோரமாக உள்ள அமோய் தீவில் சியாங் துருப்புகள் இறங்கியதாகக் கிடைத்த தகவல்கள் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. கொமோன் என்னும் தீவைச் சமீபத்தில் சியாங் துருப்புகள் கைப்பற்றின. அதை அமோய்த் தீவு என்று எண்ணிக்கொண்டு தகவல் கிடைத்திருக்கலாம். அமோயில் சியாங் துருப்புகள் இறங்கியதாக வெளி வந்த தகவல்களை விஷயம் தெரிந்த ராஜீய வட்டாரங்களில் உண்மையென்று ஒப்புக் கொள்ள வில்லை.

வட கொரியா மந்திரி எச்சரிக்கை

கொரியாவில் இன்னும் கடுமையான பெரிய யுத்தத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று வட கொரியா பாதுகாப்பு மந்திரி, சாயங்கன் இன்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். கொரியா மக்கள் குடியரசின் 5 வது ஆண்டு விழாவில் பேசிய போது அவர் மேற்கூறியவாறு குறிப்பிட்டார். வட கொரியா ராணுவம் இப்போது, மிகவும் பலம் வாய்ந்ததாக இருப்பதாக அவர் கூறினார்.

சீனக்கடலில் கம்யூனிஸ்ட், சியாங் பீரங்கிப் பிரயோகம்

மாக்கெள, பிப். 10—சீனாவில் உள்ள போர்த்துகீசிய காலனியான மாக்கெள அருகே இன்று காலை 20 நிமிஷ நேரம் கம்யூனிஸ்டு சீனா பீரங்கிப் படகுகளும் அடையாளந் தெரியாத வேறு பீரங்கிப் படகுகளும் பரஸ்பரம் சுட்டுக் கொண்டன. அந்த அடையாளம் தெரியாத படகுகள் சியாங்-கே ஷேக் சர்க்காரின் படகுகளாய் இருக்கலாம் என ஹாங்காங் தகவல்கள் கூறுகின்றன.

சியாங்கின் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பார்மோஸா அருகில் மர்ம கப்பல்கள்

கடற்கண்ணியும் தென்பட்டதாம்

டோக்கியோ, பிப். 10—பார்மோஸாவுக்கு அருகில் இனம்தெரியாத சில கப்பல்கள் தென்பட்டதால் அங்கு சஞ்சரித்துக் கொண்டிருந்த ஜப்பானிய செம்படவர்களுக்குக் கவலை ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத் திருக்கிறது. மேற் கூறிய இரு கப்பல்களும் ஜாப் கப்பல்களைப் போல தோன்றினால், அவை சமிக்ஞைக்குப் பதில் தரவில்லை. கடலில் சுரங்க வெடியைப் பார்த்ததாக மற்றோர் ஜாப் கப்பல் தெரிவித்தது. ஜாப் மீன் பிடிக்கும் படகுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு ஜாப் கண்காணிப்பு படகுகள் அனுப்பப்பட்டன.

பார்மோஸாவைப் பற்றிய வதந்திகளை அதிகமாக நம்பி விட வேண்டாமென்று உத்தியோக வட்டாரங்களில் எச்சரிக்கை செய்யப்பட்டன.

ஐக் முடிவு பற்றி ரஷ்ய கருத்து

வாஷிங்டன், பிப். 9—கொரியாவில் சமாதானம் ஏற்படுத்துவதாகத் தேர்தல் காலத்தில் ஐஸன் ஹவர் அளித்த வாக்குறுதிக்கு நேர்மாறானது பார்மோஸா பற்றிய அவரது முடிவு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான பிராவ்டா கூறுகிறது. தூரகிழக்கில், போரை விஸ்தரிக்கவே இதன் மூலம் யு. எஸ். விரும்புகிறது என இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் முதலிய நாடுகள் கருதுவதாகவும், பிரிட்டனில் கூட எதிர்ப்பு கிளம்பியிருப்பதாகவும் அப் பத்திரிகை கூறுகிறது.

பிப். 24உ தொடங்கும் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்துக்கு ரஷிய அயல் நாட்டு மந்திரி விஷின்ஸ்கி வரப்போவதாக வெளியான செய்திக்கு ஐ. நா. வட்டாரங்கள் முக்கியத்வம் அளிக்கின்றன. பார்மோஸா பற்றிய அமெரிக்க முடிவை விஷின்ஸ்கி பலமாகக் கண்டிப்பார் என எதிர் பார்க்கப் படுகிறது.

பிரிட்ஜ் டவுன் கிரிக்கெட் டெஸ்ட்

பிரிட்ஜ் டவுன், பிப். 10—இந்தியாவுக்கும் வெஸ்ட் இண்டீசுக்குமிடையே நடைபெறும் கிரிக்கெட் டெஸ்டில் முதலாவது இன்னிங்ஸில் இன்று இடைவேளையில் இந்தியா 5 விக்கெட்டுகளை இழந்து 204 ரன்கள் எடுத்தது.

வெஸ்ட் இண்டீஸ் முதலாவது இன்னிங்ஸில் 296 ரன்கள் எடுத்திருப்பது நினைவிருக்கலாம்.

பர்மாவில் சியாங் படைகளுக்கு கம்யூனிஸ்ட் ஆசி!

கூடா நட்பில் புது வகை: பர்மா சர்க்கார் தகவல்

ரங்கூன், பிப். 10—பர்மாவிலுள்ள சியாங்-கே-ஷேக் படைகள் கரேன் கலகக்காரருடன் சேர்ந்து சர்க்கார் படைகளை எதிர்த்து போராடுகின்றன என்பதற்கு தஸ்தாவேஜி பூர்வமான ருசுக்கள் இருக்கின்றன என்று பர்மா யுத்த இலாகா காரியாலயம் அறிவிக்கிறது. பர்மா கம்யூனிஸ்டுகள் இந்தக் கூடா நட்புக்கு நல்லாசி கூறியிருப்பாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

சர்க்காருக்கு எதிராக கூட்டு ராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது பற்றி கரேன்களுடன் கம்யூனிஸ்டுகள் ஒரு உடன்பாடு செய்து கொண்டிருப்பதாகவும் சியாங் படைகளுக்குச் சப்ளையாகும் ஆயுதங்கள் கம்யூனிஸ்டுகளின் கைகளுக்கு தான் போய்விடும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

'கலியுக பிள்ளையார்' அவதாரம்

இந்தூர், பிப். 10—விநாயகரைப் போல தோற்றமளிக்கும் ஒரு குழந்தை இங்கிருந்து 6மைல்தூரத்தில்உள்ள தூலியா கிராமத்தில் பிறந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இக்குழந்தையைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் வந்து கொண்டிருக்கிறார்களாம்.

இக்குழந்தையின் மூக்கு நீளமாக, பிள்ளையாரின் துதிக்கை மாதிரி இருக்கிறதாம். வாயில் இரண்டு பாகங்களிலும் இரண்டு பற்கள் இவை தந்தங்கள் போல் வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன.

ஒரு ஹரிஜன ஸ்திரீக்கு இக் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் குழந்தையும் சௌக்கியமாக இருக்கிறார்கள்.

நடுக் கடலில் நடனமாடிக் கொண்டு வந்த நிர்மானுஷ்ய கப்பல்

இந்து மகா சமுத்திரத்தில் கைது செய்யப்பட்டது

கொழும்பு, பிப். 10-"ஹோல்சு" என்னும் மோட்டார் கப்பல் இன்று கொழும்புத் துறைமுகத்துக்குள் "ராணி" என்னும் மற்றோர் கப்பலால் இழுத்துக் கொண்டு வரப்பட்டது.

அந்தக் கப்பல் கொழும்பு, சிங்கப்பூர் நேர் மார்க்கத்தில் நடு கடலில் கேட்பாரின்றி மிதந்து கொண்டிருந்தது. அந்தக் கப்பலில் ஒரு ஆத்மாவைக் கூடக் காணவில்லை.

பிப்ரவரி மாதம் 6-ந் தேதி முதல் தடவையாக நிகோபர் தீவுகளுக்கு 200 மைல் தூரத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் கப்பல் முதல் தடவையாகப் பார்த்தது. ஆள் இல்லாத அந்தக் கப்பல் மற்ற கப்பல்களுக்கு அபாயம் என்பதை உணர்ந்து பிரிட்டிஷ் துருப்புகள் கப்பலின் தளபதி எல்லாக் கப்பல்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

நீண்ட கால உடன்படிக்கையின் கீழ் 7540 டன் அரிசியுடன் கம்யூனிஸ்ட் சீனா அரிசியுடன் வந்து கொண்டிருந்த 'ராணி' என்னும் கப்பல் ரேடியோச் செய்தியைக் கேட்டு மேற் கூறிய கப்பலைக் கொழும்புத் துறைமுகத்துக்கு இழுத்து வந்தது.

மேற்கூறிய மோட்டார் கப்பல் நிர்மானுஷ்யமாக காணப்பட்டது. அதில் சமையல் செய்த உணவும் பாத்திரங்களும் புகையிலையும்காணபட்டன. அதிலிருந்த சிப்பந்திகள் என்னவானார்கள் என்று தெரியவில்லை. மொத்தம் அதில் 5 ஆசியாக்காரர்கள் இருந்திருக்க வேண்டும். மோட்டார் படகு நிகோபருக்கும் அந்தமானுக்கு மிடையே பிரயாணம் செய்து கொண்டிருந்திருக்க வேண்டும்.

இந்திய ரயில்வேக்களின் 1951-52 வரவு செலவு

இதுவரை ஏற்பட்டிராதபடி ரூ. 290 கோடி வருமானம்

நிகர லாபம் ரூ. 28 கோடி

புது டில்லி, பிப். 11—இந்திய ரயில்வேயின் 1951-52ம் வருஷ வரவு செலவு விவரங்களடங்கிய அறிக்கை ரயில்வே போர்டால் வெளியிடப்பட்டிருக்கிறது. சுதந்திரம்கிடைத்த பின்னர் தொடர்ச்சியாக மூன்றாவது வருஷமாக அமோக வருமானம் கிடைத்திருக்கிறது. பிரயாணிகள், சாமான்கள் போக்குவரத்தும் அமோகமாக நடை பெற்று வந்திருக்கிறது.

1951-52ல் இந்திய சர்க்கார் ரயில்வேக்களின் மொத்த ரோக்கு வரத்து வருமானம் ரூ 290.82 கோடி. இவ்வளவு சில்லறை வருமானம் ஏற்பட்ட தில்லை. 1950-51ல் கிடைத்ததைப் பார்க்கிலும் ரூ 27.81 கோடி அதிகமாகக் கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. பிரயாணிகள் கட்டணத்தின் மூலமாக மாத்திரம் ரூ 109.88 கோடியும் சாமான்கள் போக்கு வரத்து மூலமாக ரூ 156.790 கோடியும் வருமானம் கிடைத் திருக்கிறது. பாக்கி ரூ 24.15 கோடி நானாவித இனங்கள் மூலமாக வருமானம் கிடைத்திருக்கிறது.

நிர்வாக செலவு ரூ 194.04கோடி ஆயிற்று. அதாவது முந்தின வருஷத்தைப் பார்க்கிலும் ரூ 13.81 கோடி அதிகம். தேய்வு கழிவு நிதிக்கு ரூ 30.21 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ 21 லட்சம் சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலை முதலீட்டுத் தேய்வுக்காகும்.

தேய்வுநிதி முதலிய எல்லா செலவுகளுக்கும் கொடுத்தது போக 1951-52ல் நிகர வருமானம் ரூ61 75 கோடி. இதில் ரூ 33.41கோடி டிவிடெண்டாக பொது வருமான இனத்தில் சேர்க்கப் பட்டது. குறிப்பிட்ட வருஷத்திற்கு ரூ 28.84 கோடி நிகர மிச்சம் 1950-51ல் ரூ 15.05 கோடி தான் நிகர மிச்சம் கிடைத்தது. 1949-50ல் ரூ14.59 கோடி தான் நிகர மிச்சம் கிடைத்தது. மேற்கூறிய நிகர மிச்சத்தில் ரூ 10 கோடி அபிவிருத்தி நிதிக்கு ரூ 18.34 கோடி ரெவின்யூ ரிசர்வ் நிதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பூங்கா நகர் தமிழரசுக் கழகம்

8ந் தேதி காலை பூங்கா நகர் தமிழரசுக் கழகச் செயற்க் குழு கூட்டம் ஸ்ரீ. பி. செல்வ நாத செட்டியார் தலைமையில் கூடியது. பல அன்பர்கள் கழகத்தின் எதிர்கால வளர்ச்சி குறித்துப் பேசினார்கள். ஸ்ரீ. வி. ஐ. முனுசாமி பிள்ளை கால மானதைக் குறித்து வருத்தம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

நகர இளைஞர் கழக ஆண்டு விழா

சென்னை, பிப். 8—சென்னைசூளை நகர இளைஞர் கழகத்தின் இருபதாம் ஆண்டு விழா நேற்று மாலை நகராண்மை கழகப் பள்ளி யில் சிறப்பாக நடை பெற்றது. ஸ்ரீகே. விநாயகம் எம். எல். ஏ. எம். சி. தலைமை வகித்தார்.

கழகத்தின் தலைவர் ஸ்ரீ. டி. வி. இராமச் சந்திரன் எல்லோரையும் வரவேற்றார். கழக அமைச்சர் திரு இரா. சக்கரவர்த்தி ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

தலைவர் பேசுகையில் கழகம் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக செய்து வரும் உருபடியான சமூகச் சேவையைப் பாராட்டினார். சூளை பேட்டையில் மக்களுக்கு சுகாதாரப் பொறுப்பு உணர்ச்சியை எழுப்புவதுடன் மற்ற சமூக சீர்திருத்த துறையிலும் கழகம் செய்துள்ள சேவைகள் மிகவும் போற்றத் தகுந்தவை. தற்போது நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய அடிப்படை பிரச்னையிலும் இளைஞர் இனி தீவிரமாக பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

திரு ப. சொ. லிங்கம் ஆசிரியர் சௌபாக்யம் 'நகரமும் நாமும்" என்பது பற்றியும், திருமதி டாக்டர் கராச மாணிக்கம் அம்மையார் (உதவி சுகாதார அதிகாரி சென்னை)''' நலிவற்ற வாழ்வு நமது பிறப் புரிமை" என்பது பற்றியும் சொற் பொழிவாற்றினார்கள்.

திரு. இர. சக்கர வர்த்தி நன்றி கூற, விழா இனிது முடி வுற்றது.

தேனாம்பேட்டையில் கண்டனக் கூட்டம்

சென்னை வன்னிய தேனாம்பேட்டையைச் சேர்ந்த தேசிய சங்கங்களும், பொது மக்களுமாக சேர்ந்த கூட்ட மொன்று டி பேட்டையிலுள்ள யு. பதி அண்டு கம்பெனியில் 8 2 53 ஞாயிற்றுக் கிழமை காலை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் திரு. பி. எஸ் உமாபதி நாயக்கர் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் '1 2 53 சர்வ கட்சி ஊர்வலத்தில் தேசியக் கொடியை அவமதித்த மாற்றுக் கட்சியார் அரசியல் ஞானமற்ற வகையில் காங்கிரஸ் கட்சியினரிடத்தில் நடந்து கொண்டதை வன்மையாக கண்டிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

பெங்களூர், பிப். 10—சாம்பியன் ரீப் சுரங்கத் தொழிலாளர்களுக்கு 1950-ம்வருஷத்துக்கு நாலு மாத போனஸ் கொடுக்க மத்திய அரசாங்க டிரிப்யூனல் உத்தரவிட்டிருக்கிறது.

இஸ்ரேலில்

ரஷ்ய ஸ்தானீகர் காரியாலயத்தின் மீது குண்டு வீச்சு

ஸ்தானீகர் மனைவிக்கு காயம்

30 பேர் கைது

டெல் அவீவ், பிப். 10—நேற்றிரவில் இங்குள்ள சோவியத், ஸ்தானீகர் காரியாலயத்தின் மீது வெடி குண்டு வீசப்பட்டதில் சோவியத் ஸ்தானிகரின் மனைவி ஸ்ரீமதி கிளாடி ஏர் ஷாவுக்கு முகத்திலும் காலிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. ஸ்தானீகர் காரியாலயம் தகர்ந்தது. ஸ்ரீமதி ஏர் ஷாவுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பமானவையே.

கம்யூனிஸ்ட் எதிர்ப்பு லீக் தலைவர் ஹபீப் ஷுபர் உள்ளிட்டு 30 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மேற் கூறிய சோவியத் ஸ்தானிகர் காரியாலயத்தில் மற்றும் மூவருக்குக் காயம் ஏற்பட்டது.

திருச்சூர் அருகே பஸ் விபத்து

இருவர் பலி

இரு குழந்தைகள் தப்பின

திருச்சூர், பிப். 10—இன்று மத்தியானம் திருச்சூரிலிருந்து 5மைல்களுக்கு அப்பால் உள்ள பிராமங்கலத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். தெய்வாதீனமாக இரு குழந்தைகள் தப்பினர். பின்னால் ஓடி பஸ் வந்துகொண்டிருந்ததாகவும் போட்டி போட்டு அதிக வேகத்தில் ஓடியதாகவும் கூறப்படுகிறது. 'மெயின் ஸ்பிரிங் பிளேட் உடைந்து ஹத்து மீறி பக்கத்தில் உள்ள ஒரு தந்திக்கம்பத்தில் மோதி ஒரு பள்ளத்தில் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவரில் 5 பேர் நிலை கவலைக்கிட மளிப்பதாகக் கூறப்படுகிறது.

மரணமடைந்தவரின் அடையாளம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

போலீஸ் கார்யாலயத்தில் திருட்டு!

டில்லியில் துணிகரச் செயல்

டில்லி, பிப். 10—கடந்த ஞாயிற்றுக் கிழமை யன்று டில்லி போலீஸ் தலைமைக் காரியாலயத்தில் ஒரு துணிகரத் திருட்டு நடந்தது.

வரவு செலவுக் கணக்கு அறையில் அல்மாரியின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை திங்கட் கிழமை யன்று போலீஸ் அதிகாரிகள் பார்த்துத் திகைத்து விட்டனராம். அல்மாரிக்குள்ளிருந்த பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த 400 ரூபாய் கொள்ளையிடப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுவரை குற்றவாளி கண்டு பிடிக்கப்பட வில்லை.

காஷ்மீர் பேச்சு

ஜபருல்லாவுடன் கிரஹாம் பேச்சு

ஜெனிவா, பிப். 10—காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக டாக்டர் கிரஹாம் இன்று மீண்டும் ர்ாக். பிரதிநிதியுடன் 40 நிமிஷ நேரம் சம்பாஷணை நடத்தினார். இன்று இந்தியப் பிரதிநிதி களுடன் பேச்சு நடைபெறவில்லை.

கெய்ரோவருகில் விமான விபத்து: 31 பேர் பலி

கெய்ரோ, பிப். 10—எகிப்து, விமானப் படையைச் சேர்ந்த ஒரு விமானம் பலத்த புழுதிப் புயல் காரணமாக கெய்ரோ வருகில் ஒரு பாலைவனத்தில் விழுந்து நொருங்கிவிட்டது. ராணுவ அதிகாரிகள் இதர்கள் மொத்தம் 31 பேர் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் உயிர் தப்பினர். இவர்களில் இருவருக்குப் பலத்த காயமேற்பட்டிருக்கிறது.

நியூயார்க் பருத்தி

நியூயார்க். பிப். 10—
ஆரம்ப விலை (மார்ச்) 32·63
முடிவு விலை (மார்ச்) 32·89

ஆர்.என்.ஆர்.பிக்சர்ஸ்
அளிக்கும் ஒரு ஹாஸ்ய
சமூகச்சித்திரம்
ஜாதகம்
ஸ்டுடியோ: ஏவி எம்
கதை வசனம்: டி.எம்.யு.பதி
டைரக்ஷன் & தயாரிப்பு
ஆர்.நாகேந்திர ராவ்
RNR PICTURES